بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/05/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு &**
அநீதிக்குள்ளாக்கப்பட்டிருக்கும் பாலஸ்தீனர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் கருணை புரிவானாக! பாலஸ்தீனர்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்கட்டுமாக! அல்லாஹ் அவர்களுக்கு அறிவும் புத்திக்கூர்மையும் வலிமையும் கொண்ட, தனது விஷயத்தை எடுத்துரைக்கக்கூடிய மற்றும் தமது உரிமைகளைப் பெறக்கூடியவர்களாகவும் இருக்கும் தலைவர்களை வழங்குவானாக!

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. அன்னார் பத்ர் போர் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

மேலும், பல போர்களிலும் கலந்து கொண்டார்கள். பத்ர் போரில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆகியோர் ஓர் ஒட்டகத்தில் மாறி மாறி பயணித்தார்கள். பத்ர் போரின் போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறைஷியர்களின் வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்துவதற்காகப் புறப்பட்ட போது, வழியில், குறைஷியர்களின் ஓர் அதிவேகமான படை தமது வணிகக்குழுவைக் காப்பாற்றுவதற்காகப் புறப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரிய சஹாபாவிற்கு இந்த விஷயத்தைத் தெரியப்படுத்தியவாறு ஆலோசனை கேட்டார்கள். அப்பொழுது ஒரு குழுவினர், படையை விட்டுவிட்டு, வணிகக் குழுவை நோக்கிச் செல்வதற்கு சாதகமாக ஆலோசனை கூறினர். இந்த ஆலோசனையைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தின் நிறம் மாறிவிட்டது.

இத்தகைய நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் ஆகியோர் மிகவும் தாக்கமுடைய சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். எந்நிலையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருப்பதாக உறுதியளித்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் கணவர் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். பத்ருக்குப் பிறகு நோயுற்று வஃபாத்

ஆகிவிட்டார்கள். அப்பொழுது, ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் வயது 20 க்கும் அதிகமாக இருந்தது. ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடமும் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை நிக்காஹ் செய்து கொள்ளுமாறு கூறினார்கள். இருவர் தரப்பிலிருந்தும் இந்த விவகாரத்தில் மௌனம் நிலவி, நேர்மறையான பதில் கிடைக்காத போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மிகவும் துயரம் ஏற்பட்டது.

அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே! கவலை ஏதும் கொள்ளாதீர்! இறைவனுக்கு சம்மதம் என்றால், ஹஃப்ஸாவுக்கு உஸ்மான் மற்றும் அபூபக்ரை விடச்சிறந்த கணவரும், உஸ்மானுக்கு ஹஃப்ஸாவை விடச் சிறந்த மனைவியும் கிடைத்துவிடுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே தம் தரப்பிலிருந்து ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை நிக்காஹ் செய்து கொள்வதற்காகத் திருமண தூது அனுப்பிய போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிக மகிழ்ச்சியோடு வரனை ஏற்றுக் கொண்டார்கள். ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு, ஷஃபான் மாதத்தில், ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமண பந்தத்தில் வந்து, நபியின் துணைவியாரைச் சேர்ந்தவர்களாகிவிட்டார்கள்.

உஹது போரின் போது, குறைஷியர்கள் கிட்டத்தட்ட நாலா புறத்திலிருந்தும் கடுமையாகத் தாக்குதல் தொடுத்தார்கள். மேலும், முஸ்லிம்களின் கொடியேந்துபவரான முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள். அப்போது, அவர்களின் புறத்தோற்றம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒத்துப்போனதன் காரணத்தினால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டதாகக் கூச்சலிடப்பட்டது. இந்தச் செய்தியால் முஸ்லிம்களின் எஞ்சியிருந்த துணிவும் அகல ஆரம்பித்தது. அவர்களின் குழுமம் முற்றிலும் சிதறி போய் விட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது முஸ்லிம்கள் மூன்று பாகங்களாகப் பிரிந்திருந்தனர். ஒரு குழுவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு ஓடி விட்டது. ஆனால், இது மற்ற அனைவரையும் விட மிகவும் குறைவாக இருந்தது. இரண்டாவது குழுவினர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு துணிவிழந்து அமர்ந்து விட்டிருந்தனர்; தற்பொழுது சண்டையிடுவதை வீணானதாகக் கருதினர். மூன்றாவது குழுவோ தொடர்ச்சியாகப் போரிட்டுக் கொண்டிருந்தது. இது முஸ்லிம்களுக்கு மிகவும் சோதனைக்குரிய ஒரு காலமாக இருந்தது.

ஆக, நிராசையடைந்து ஒருபுறம் அமர்ந்து விட்ட அந்த மக்களிலேயே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அந்த மக்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு இருப்பது தெரியவரத் தெரியவர, அவர்கள் பித்தர்களைப் போன்று சண்டையிட்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அக்கம் பக்கம் ஒன்று கூடி வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சில சஹாபாவோடு மலைக் கணவாயைச் சென்றடைந்த போது, நிராகரிப்பாளர்களின் ஒரு கூட்டம் கணவாய் மீது தாக்குதல் தொடுத்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது இவ்வாறு துஆ செய்தார்கள்: 'அல்லாஹ்வே! இந்த மக்கள் எங்களை வந்தடையாமல் இருப்பார்களாக!' இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில முஹாஜிர்களோடு இணைந்து அந்த இணை வைப்பவர்களை எதிர் கொண்டார்கள். மேலும், அவர்களை அடித்து விரட்டியடித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: அபூசுஃப்யான் தனது சில கூட்டாளிகளோடு முஸ்லிம்கள் ஒன்று கூடியிருந்த அந்த மலைக் கணவாயை நோக்கிச் சென்றார். மேலும், 'முஸ்லிம்களே! உங்களில் முஹம்மத் (ஸல்) உள்ளாரா?' என்று உரத்த குரலில் கேட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரும் பதிலளிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தினார்கள். பிறகு, அவர் அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் கேட்டார். இதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழகாட்டலுக்கிணங்க யாரும் பதிலளிக்கவில்லை. இதனால், அவர் உரத்த குரலில் ஆணவமான தொனியில், 'இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர். ஏனெனில் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், பதிலளித்திருப்பார்கள்' என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் தம்மையும் அறியாமல், 'அல்லாஹ்வின் எதிரியே! நீ பொய்யுரைக்கிறாய்! நாங்கள் அனைவரும் உயிரோடு இருக்கிறோம். மேலும், இறைவன் எங்கள் கைகளால் உங்களை இழிபடுத்தி விடுவான்' என்று கூறினார்கள்.

அபூ சுஃப்யான் மிகவும் உரத்த குரலில் اعل هبل 'உஃலு ஹுபுல்' அதாவது, ஹுபுல் சிலையே உனது மகிமை உயரட்டும்' என்று முழங்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பெயர் எடுக்கப்படும் போது அமைதிகாக்குமாறு கட்டளையிட்டிருந்தார்கள். இப்பொழுது, இறைவனுக்கு எதிராக சிலையின் பெயர் வந்தவுடனேயே அமைதியிழந்து விட்டார்கள்.

மேலும், 'நீங்கள் ஏன் பதிலளிப்பதில்லை? الله اعلى واجل அல்லாஹு அஃலா வ அஜல்லு அதாவது, உயர்வும் மேன்மையும் அல்லாஹ்வுக்கு மட்டும் உரித்தானது எனக் கூறுங்கள்!' என்று கூறினார்கள். அபூசுஃப்யான், ' لنا العزى ولا عزى لكم லனல் உஸ்ஸா வலா உஸ்ஸா லக்கும். அதாவது, எங்களுடன் உஸ்ஸா சிலை உள்ளது. உங்களோடு உஸ்ஸா சிலை இல்லை' என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாவிடம் கூறினார்கள்:

'நீங்கள் கூறுங்கள்! الله مولنا ولامولى لكم அல்லாஹு மவ்லானா வலா மவ்லா லகும். உஸ்ஸா சிலை என்ன! எங்களோடு அல்லாஹ் உதவியாளனாக இருக்கிறான். உங்களோடு எந்த உதவியாளரும் இல்லை.'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போருக்குப் பிறகு, மதீனா வந்தடைந்த போது, நயவஞ்சகர்களும் யூதர்களும், 'முஹம்மத் (ஸல்) அவர்கள் அரசாட்சியை வேண்டுகிறார்கள். அவர்கள் இழப்படைந்த அளவுக்கு இன்று வரை எந்த நபியும் இழப்படையவில்லை' என்று கூறி மகிழ்ச்சியைக் கொண்டாடலானர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்த நயவஞ்சகர்களைக் கொல்வதற்கு அனுமதி கோரினார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'கலிமா கூறுபவரைக் கொல்வதிலிருந்து நான் தடுக்கப்பட்டுள்ளேன்' என்று கூறினார்கள்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இனிவருங்காலங்களிலும் தொடரும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மீண்டும் ஒருமுறை அநீதிக்குள்ளாக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்காக துஆ செய்யுமாறு கூறினார்கள். மேலும், கூறினார்கள்:* போர் நிறுத்தப்பட்டு விட்டது தான். ஆயினும், வரலாறு நமக்குக் கூறுவதாவது, சில காலங்களுக்குப் பிறகு ஏதாவது ஒரு சாக்குப்போக்கு மூலம் பகைவர்கள் இந்த பாலஸ்தீனர்களை அநீதிக்கு இலக்காக்கிக்

கொண்டேயிருக்கின்றனர். அல்லாஹ் கருணை புரிவானாக! பாலஸ்தீனர்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்கட்டுமாக! அல்லாஹ் அவர்களுக்கு அறிவும் புத்திக்கூர்மையும் கொண்ட தலைவர்களை வழங்குவானாக!

இவ்வாறே, அநீதிக்கு இலக்காகிக் கொண்டிருக்கும் அஹ்மதிகளுக்காகவும், குறிப்பாக பாகிஸ்தானில் உள்ளவர்கள்; அவர்களுக்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

நான் சில மர்ஹூம்களைப் பற்றிக் கூறவேண்டியுள்ளது. முதல் குறிப்பு, காதியான் வெளியீட்டுத் துறையின் துணை நாஸிர் குறைஷி முஹம்மத் ஃபஸ்லுல்லாஹ் சாஹிப் அவர்களுடையது. இவர்கள் ஏப்ரல் 27 அன்று வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ

இவர்களின் தாயாரின் தந்தைவழிப் பாட்டனாரும், தந்தையாரின் தாய்வழிப் பாட்டனாருமான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் முன்ஷீ மெஹர் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. மேலும், மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக சந்தா கொடுத்தவர்களிலும் அவர்களது பெயர் எழுதப்பட்டுள்ளது.

ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்ற பிறகு குறைஷி சாஹிப் அவர்கள் 23 ஆண்டுகள் 5 மாதங்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கற்பிக்கும் பணியை செய்தார்கள். இவர்களின் மொத்த தொண்டு காலம் 37 ஆண்டுகள் 7 மாதங்கள் ஆகிறது. அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி 1 மகன் மற்றும் 2 மகள்கள் உள்ளனர்.

இவர்கள் தொடர்பாக வெளியீட்டுத் துறை நாஸிர் மக்தூம் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: மிகவும் பரிவு காட்டும் ஆசிரியராக இருந்தார்கள். மாணவர்களோடு மிகவும் அன்பு மற்றும் தோழமையுடன் பழகி வந்தார்கள். எப்பொழுதும் மிகவும் நேர்மையுடனும் வக்ஃபின் ஆன்மாவோடும் பணிபுரிந்தார்கள். நேரத்தைப் பேணிவந்தார்கள். மாணவர்களையும் நேரத்தைப் பேணவைத்தார்கள். இந்தியாவின் பெரும்பாலான முபல்லிஃகுகள் இவர்களின் மாணவர்கள் ஆவார்கள். இவர்களிடமிருந்து அவர்கள் பயன் பெற்றார்கள்.

இவர்களின் இயல்பில் மிகவும் எளிமை இருந்தது. உரையாடலில் சுருக்கம் இருந்தது. ஆனால், மிகவும் அறிவுப்பூர்வமான மற்றும் ஆதாரப்பூர்வமான பேச்சாக இருந்து வந்தது. இவர்களுக்கு இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் துணை சத்ராக தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்தது. 34 ஆண்டுகள், நீண்ட காலமாக இவர்கள் பத்ர் பத்ரிக்கையின் துணை ஆசிரியராகத் தொண்டாற்ற நல்வாய்ப்பு பெற்றார்கள். மிஷ்காத் மாத இதழின் ஆசிரியராகவும் இருந்தார்கள். இந்தியாவின் அஹ்மதிய்யத் வரலாற்றுக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்கள்.

ரூஹானி கஸாயினுடைய **Computerized** பதிப்பு வெளியான போது, அதில் இவர்கள் சில **proof reading** பிழைகளைக் கண்டறிந்தார்கள். இதற்குப் பிறகு அவை திருத்தப்பட்டன. மிகவும் நுணுக்கமான கண்ணோட்டத்துடன் **proof reading** பார்த்து வந்தார்கள். தனித்தனியாக வெளியான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை முழுமையாக **proof reading** பார்த்துள்ளார்கள். ஆரிய தர்ம், சத் பச்சன் ஆகியவற்றின் ஆதாரங்களைத் தேடுவது, ஆய்வு செய்வது, சரி பார்ப்பது ஆகியவற்றை மிகவும் கடினமாக உழைத்து இவர்கள் செய்தார்கள்.

இவர்கள் கூறிவந்தார்கள்: ‘ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த நூல் இந்துக்கள் மற்றும் ஆரியர்களுக்குச் சான்றாக முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விரு நூல்களும் இவ்விரு மதங்களுக்கு நிகராக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. எனவே, இவற்றை மிகவும் நுணுக்கமான முறையில் சரிபார்க்க வேண்டும். ஆதாரங்களை சரிபார்க்க வேண்டும்.’

இப்போது, நம் சார்பாக கத்தே மன்ஸூர் எனப்படும் எழுத்து வடிவில் வெளியிடப்பட்டுள்ள திருக்குர்ஆனின் software - ஐ தயாரிப்பதில் இவர்களின் தொண்டு அதிகம் உள்ளது. இரவுப் பகலாக இவர்கள் அதை சீரமைப்பதிலும், சரிசெய்வதிலும், அழகுபடுத்துவதிலும் பணிபுரிந்துள்ளார்கள். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் மௌலவி ஷேர் அலீ சாஹிப் (ரலி) அவர்களின் ஆங்கில மொழியாக்க திருக்குர்ஆனையும், ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் (ரலி) அவர்களின் உருது மொழியாக்க குர்ஆனையும் தயார் செய்வதிலும் இவர்கள் அதிகம் பணிபுரிந்துள்ளார்கள். கத்தே மன்ஸூர் எனப்படும் எழுத்து வடிவில், மொழியாக்கம் இல்லாத திருக்குர்ஆனோ வெளியாகிவிட்டது.

இவர்களின் வெளியீட்டுத் துறை நாஸிர் சாஹிப் எழுதுகிறார்கள்: என்னுடைய ஆசிரியராகவும் இருந்தார்கள். எனது துணைவியாரின் மாமாவாகவும் இருந்தார்கள். இவ்வாறு இருந்தும் கூட துணை நாஸிர் என்ற வகையில் எப்பொழுதும் கட்டுப்படுதலுக்கான உணர்வுடன் பணியாற்றினார்கள். மிகவும் பணிவு மற்றும் தன்னடக்கத்தோடு பேசுவார்கள். அல்லாஹ் மர்ஹூம் அவர்களோடு மக்ஃஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது குறிப்பு, இயக்கத்தின் முபல்லிஃக் சய்யித் பஷீருத்தீன் அஹ்மத் சாஹிப் அவர்களுடையது. இவர்களும் காதியானைச் சேர்ந்தவர்கள் தான். 83 வயதில் இறைநியதிக்கு ஏற்ப வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் சய்யித் சயீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேரராவார்கள். மிக அதிகமாக இறைவழிபாடு செய்யக்கூடியவராகவும் தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் துஆ செய்யக்கூடியவராகவும் எளிய இயல்புடைய மனிதராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாகவும் இருந்தார்கள். மூன்று மகன்களைப் பின்விட்டுச் சென்றுள்ளார்கள். மூன்று மகன்களும் அஞ்சுமனுடைய அலுவலகங்களில் பணியாற்றுகிறார்கள்.

அடுத்த குறிப்பு, ஃபய்ஸ் அஹ்மத் சாஹிப் ஷானா அவர்களின் மகன், காதியானைச் சேர்ந்த வாழ்வை அர்ப்பணித்தவர், பஷாரத் அஹ்மத் ஹைதர் சாஹிப் அவர்களுடையது. இவர்கள் 71 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளமான, வெறி நாய்கடிக்கப் பெற்ற (பிறகு குணமடைந்த) ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேரராவார்கள். இவர்கள் வாழ்வை அர்ப்பணித்து கர்நாடகாவிலிருந்து காதியான் வந்தார்கள். பிறகு மத்ரஸா அஹ்மதிய்யாவில் கல்வி பயின்ற பிறகு பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றினார்கள்.

பிறகு இவர்கள் ரிஷ்தா நாத்தா (திருமண பந்தத்) துறையின் இன்சார்ஜாக நியமிக்கப்பட்டார்கள். அங்கு தொண்டாற்றினார்கள். 46 ஆண்டுகள் வரை இயக்கத்துக்குத் தொண்டாற்றினார்கள். வழிவகைகள் குறைவாக இருந்த போதிலும் மிகவும் ஒழுக்கமான இயல்போடு எளிமையாக வாழ்வைக் கழித்தார்கள். மிகவும்

எளிமையான வாழ்க்கை இருந்தது. மிகவும் நல்லொழுக்கம் கொண்டவராகவும் நன்மை செய்ய விரும்பும் மனிதராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். துணைவியார் மட்டுமின்றி மூன்று மகள்கள் உள்ளனர். அவர்களை இவர்கள் நன்றாகப் படிக்கவும் வைத்தார்கள். பிறகு, அவர்கள் அனைவரையும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள்.

*இவர்கள் மட்டுமின்றி, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பின்வரும் மர்ஹூம்களின் நற்குறிப்புகளையும் எடுத்துரைத்து, ஜனாஸா காயிப் தொழ வைப்பதற்கான அறிவிப்பை செய்தார்கள்:*

அஹ்மதிய்யா ஜமாஅத் பெஷாவர் மாவட்டத்தின் அமீர் மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மத் அலீ கான் சாஹிப் அவர்கள், ராஜ்கீ கிழக்கு தாருர் ரஹ்மத்தின் முன்னாள் வட்டார சத்ர் மதிப்பிற்குரிய முஹம்மத் ரஃபீ கான் ஷஹ்ஸாதா சாஹிப் அவர்கள், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அயாஸ் யூனுஸ் சாஹிப் அவர்கள், மியான் குர்பான் ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகன், ரப்வாவின் வக்காலத்தே மால் ஸாலிஸின் முன்னாள் ஊழியராக இருந்த மியான் தாஹிர் அஹ்மத் சாஹிப் அவர்கள், யூ.கேவின் மதிப்பிற்குரிய ரஃபீக் ஆஃப்தாப் சாஹிப் அவர்கள், ஜாமிஆ அஹ்மதிய்யா யூ.கேவின் ஆசிரியராக இருக்கும் மிர்ஸா நஸீர் அஹ்மத் சாஹிப் சிட்டி மஸீஹ் அவர்களின் துணைவியரான மதிப்பிற்குரிய ஸரீனா அக்தர் சாஹிபா அவர்கள், மதிப்பிற்குரிய ஹாஃபிழ் முஹம்மத் அக்ரம் சாஹிப் அவர்கள், மதிப்பிற்குரிய சவுத்ரி நூர் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்கள், ஹக்கீம் உபைதுல்லாஹ் மின்ஹாஸ் சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய மஹ்மூத் அஹ்மத் மின்ஹாஸ் சாஹிப் அவர்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் உயர் படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ
لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ
وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**